# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FIFTH SEMESTER – **NOVEMBER 2019**

**TL 5502 – SANGAM LITERATURE**

Date: 30-10-2019 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00-04:00

**பகுதி - அ (10 X 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. சங்க இலக்கியங்களின் வேறுபெயர்களுள் இரண்டனை எழுதுக.
02. எட்டுத்தொகை நூல்களில் புறநூல்களை மட்டும் குறிப்பிடுக.
03. 'காமம் மிக்க கழிபடர் கிளவி' - பொருள் தருக.
04. குறுந்தொகையின் அமைப்பு முறையை எழுதுக.
05. 'கையில் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல' - பொருள் எழுதுக.
06. குறிஞ்சிப்பாட்டின் வேறுபெயர்கள் யாவை?
07. ஐங்குறுநூறு - பெயர்க்காரணம் எழுதுக.
08. அகநானூற்றின் முப்பெரும் பிரிவுகளை எழுதுக.
09. நற்றிணை - குறிப்பு வரைக.
10. விரிச்சி கேட்டல் - பொருள் தருக.

**பகுதி - ஆ (5 X 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. 'ஓங்குமலை நாட ஒழிக நின் வாய்மை' என்ற நற்றிணைப் பாடற்சிறப்பை எழுதுக.
12. குறுந்தொகையில் தலைவன் கூற்றாக வரும் எவையேனும் இருபாடற் கருத்துகளை எழுதுக.
13. 'யாயும் ஞாயும் யாராகியரோ? என்ற பாடலின் பொருளை விளக்குக.
14. புறநானூற்றின் அமைப்பும் சிறப்பும் குறித்து எழுதுக.
15. ஏறுதழுவுதல் தமிழர்ப் பண்பாடு என்பதைப் பாடற்சான்றுடன் விவரி.
16. வேட்கைப்பத்து பாடல் வழி தலைவனின் பரத்தை ஒழுக்கம் எவ்வாறு வெளிப்படுகிறது?
17. பொருள் சேகரிக்க விரும்பிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிய அகநானூற்றுப் பாடற்கருத்தை எழுதுக.

**பகுதி - இ (3 X 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடிய பாடற்செய்திகளை விவரி.

**( அல்லது )**

குறுந்தொகையில் தோழி கூற்றாக வரும் பாடல்களில் எவையேனும் நான்கனை விளக்குக.

19. அதியமானின் வீரம் மற்றும் கொடைத்தன்மை குறித்துக் கட்டுரை வரைக.

**( அல்லது )**

பாரியின் வீரம் மற்றும் ஈரம் குறித்து எழுதுக.

20. சங்ககால மக்களின் வாழ்வை அகப்பாடல்கள் வழி விளக்குக.

**( அல்லது )**

சங்க இலக்கியங்களின் தனித்தன்மைகளை விவரிக்க.

*************